# ரோஹிங்யா சட்டவிரோத குடியேற்றப்பகுதி அதிகாரிகள் நடவடிக்கை

பெட்டாலிங்ஜெயா, மே 29-
நேற்று காலையில் செந்தூலில் அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது அரசாங்க நிலத்தில் ரோஹிங்யா மக்கள் சட்டவிரோதமாக குடியிருப்பது கண்டறியப்பட்டது.

இத்தகைய சட்டவிரோத குடியிருப்பு என்பது 20 முதல் 30 வீடுகளைக் கொண்டது. தக்க ஆவணங்கள் இல்லாமல் இந்தக் கள்ளக் குடியேறிகள் நான்கு ஆண்டுகாலமாக இங்கு குடியிருந்து வருகிறார்கள்.

வீடுகள் மட்டுமின்றி இங்குள்ள 5 மளிகை கடைகள் உதவி தொகை கொண்ட சமையல் எண்ணெய்யை விற்று வருவதாகவும் தெரிய வந்தது.

அமிர் என்ற ரோஹிங்யா ஆடவர் இங்கு ஓர் அறையினை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தங்கி வருகிறார்.

மாதந்தோறும் இவர் செலுத்தும் தொகை 300 வெள்ளி. மற்றொருவர் மாதம்தோறும் ஆயிரம் வெள்ளி ஊதியத்திற்கு துப்புரவு பணியாளராக இருந்து வருகிறார்.

போலீஸ் சிவில் தற்காப்பு படை



கோலாலம்பூர் மாநகர் மன்றம், தேசிய பதிவு இலாகா ஆகிய தரப்புகள் கூட்டாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கை இது. இது சம்பந்தமாக குடிநுழைவுத்துறை தலைமை இயக்குநர் ருஸ்லின் ஜுசோ சில விவரங்களை தனது முகநூலில் வெளியிட்டுள்ளார் .

மியான்மார், இந்தோனேசியா, இந்தியா ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் 123 நபர்கள் மீது சோதனை நடத்தப் பட்டது. பெரும்பாலோர் ரோஹிங்ய மக்கள் என்று தெரிய வந்தது.

சிலருக்கு கடப்பிதழ் இல்லை. பலருக்கு வேலை பெர்மிட் காலாவதியாகியுள்ளது.

சிலர் குறிப்பிட்ட காலகட்டத்திற்கு மேலாக தங்கியுள்ளது தெரிய வந்தது என்று குடிநுழைவுத்துறை தலைமை இயக்குநர் விவரித்தார்.